பேரூராட்சிகள், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பெருநகர சென்னை காவல்துறை, தீயணைப்புத்துறை, சென்னை வானிலை ஆய்வு மையம், மாநிலப் பேரிடர் மேலாண்மைத் துறை, மின்துறை, இந்து சமய அறநிலையத்துறை, சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட நிர்வாகம், பி.எஸ்.என்.எல்., தென்னக ரெயில்வே, சென்னை மெட்ரோ ரெயில்வே மற்றும் தொடர்புடைய துறைகளை சார்ந்த அலுவலர்களுடன் வடகிழக்குப் பருவமழையின் போது ஏற்படும் பாதிப்புகளிலிருந்து பொதுமக்களை பாதுகாப்பது குறித்தும், மேற்கொள்ளப்பட வேண்டிய நிவாரணப் பணிகள் குறித்தும் விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

பின்னர், முதலமைச்சரால் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 15 மண்டலங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள இந்திய குடிமைப்பணி அளவிலான 15 கண்காணிப்பு அலுவலர்களிடம் பருவமழையின் போது மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் கேட்டறிந்தார்.

## மழைநீர் வடிகால் பணிகள்

பெருநகர சென்னை மாநகராட்சியில் மழைநீர் வடிகால்வாய்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள தூர்வாரும் பணிகள், பராமரிப்பு பணிகள் குறித்தும், சென்னையில் ரூ.445 கோடி மதிப்பீட்டில் 171 கி.மீ. நீளத்திற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள மழைநீர் வடிகால் பணிகள் குறித்தும், அடையாறு, கூவம், கொசஸ்தலையாறு மற்றும் கோவளம் வடிநிலப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள மழைநீர் வடிகால் பணிகள் குறித்தும், கால்வாய்கள் மற்றும் ஆறுகளில் மிதக்கும் கழிவுகளை அகற்றுவது தொடர்பான நடவடிக்கைகள் குறித்தும், பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் 30 பெரிய கால்வாய்களில் நவீன யந்திரங்களைக் கொண்டு தூர்வாருதல் மற்றும் ஆகாயத்தாமரைகள் அகற்றுவது குறித்தும், சிறிய

அகற்றப்படுவது குறித்தும், அனைத்து நீர்வழிக் கால்வாய்களிலும் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆழப்படுத்துதல் மற்றும் அகலப்படுத்துதல் பணிகள் குறித்தும் முதலமைச்சரின் அறிவுரையின்படி, சென்னை மாநகராட்சி பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தும் வகையிலும், மழைநீர் வீணாக கடலில் கலப்பதை தடுக்கும் வகையிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் 210 நீர்நிலைகள் புனரமைப்பு பணிகளின் தற்போதைய நிலை குறித்தும் இக்கூட்டத்தில் சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி கேட்டறிந்தார்.

## இம்மாத இறுதிக்குள்...

இதில் குறிப்பாக பெருநகர சென்னை மாநகராட்சியில் 90 சதவீதம் நிறைவுற்றுள்ள ரூ.445 கோடி மதிப்பீட்டில் 171 கி.மீ. நீளத்திற்கான மழைநீர் வடிகால் பணிகளை 30.11.2019க்குள் முடிக்க வேண்டுமென அமைச்சர் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

வடகிழக்கு பருவமழையின்போது, விழுந்த மரங்களை அகற்ற தேவையான சிறிய மற்றும் பெரிய அறுவை யந்திரங்கள், நிவாரண மையங்கள், தாழ்வான பகுதிகளில் தேங்கி நிற்கும் மழைநீரை வெளியேற்ற தேவையான அதிக குதிரை திறன் கொண்ட மோட்டார் பம்புகள், ஜெனரேட்டர்கள், பொதுமக்களுக்கு உணவு வழங்க தேவையான பொது சமையலறைகள், தேவையான நோய்த்தடுப்பு மருந்துகள், அடிக்கடி கழிவுநீர் அடைப்பு ஏற்படும் இடங்களை கண்டறிந்து அவ்விடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள், கழிவுநீர் அகற்றும் ஜெட்ராடிங், சூப்பர் சக்கர், கழிவுநீர் கால்வாய்களில் தூர்வாரும் யந்திரங்கள் ஆகியவை தயார் நிலையில் இருக்க வேண்டுமென சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அமைச்சர் உத்தரவிட்டார்.

## மருத்துவ முகாம்கள்

மேலும், பருவமழை காலங்களில் பொதுமக்களுக்கு தொற்றுநோய் மற்றும் காய்ச்சல் ஏற்படாதவண்ணம் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள பொதுமக்களுக்கு சிறப்பான மருத்துவ சிகிச்சைகளை அளிக்க சிறப்பு மருத்துவ முகாம்களை ஆங்காங்கே நடத்திட மருத்துவ குழுக்கள் தயார்நிலையில் இருக்க வேண்மெனவும் அமைச்சர் இக்கூட்டத்தில் தெரிவித்தார்.

பின்னர் பருவமழை காலங்களில் வெள்ளம், புயல் உள்ளிட்ட பேரிடர்கள் ஏற்படும் போது மீட்புப்பணிகளில் ஈடுபடுவது தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் 200 தன்னார்வலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு தமிழ்நாடு கமாண்டோ பள்ளி மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த தன்னார்வலர்களுக்கு தேசிய பேரிடர் மேலாண்மைத்துறையின் ஆப்தா மித்ரா திட்டத்தின் கீழ் ரூ.5000 மதிப்புள்ள பேரிடர் மீட்பு உபகரணங்கள் மற்றும் சான்றிதழ்களை அமைச்சர்கள் வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ஹன்ஸ்ராஜ் வர்மா, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் ஹர்மந்தர் சிங், அரசு முதன்மைச் செயலாளர்–வருவாய் நிர்வாக ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் கோ.பிரகாஷ், நகராட்சி நிர்வாக ஆணையாளர் கா.பாஸ்கரன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநர் டாக்டர் கே.எஸ்.பழனிசாமி, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் த.ந.ஹரிஹரன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் சி.என்.மகேஸ்வரன், பேரூராட்சிகளின் இயக்குநர் எஸ்.பழனிச்சாமி, சென்னை மாவட்ட கலெக்டர் ஆர்.சீதாலட்சுமி, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் பாலச்சந்திரன், 15 மண்டல கண்காணிப்பு அலுவலர்கள், காவல்துறை உயர் அலுவலர்கள், பெருநகா சென்னை மாநகராட்சி இணை ஆணையாளர் மற்றும் துணை ஆணையாளர்கள், தொடர்புடைய பிற அரசு துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாநிலத்தை வளர்ச்சி பெற செய்வதா

போலீசாரிடம் நடிகர் செந்தில் வருகிறார்கள்.

**ஐ.எஸ்.தீவிரவாத அமைப்பின் தலைவன்**

# அல்பாக்தாதி கொலை: உறுதி செய்தது ஐ.எஸ்.

பெய்ரூட்,நவ.1–

ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பின் தலைவன் அல் பாக்தாதி கொல்லப்பட்டதை அந்த அமைப்பு உறுதி செய்துள்ளது.

மேலும், புதிய தலைவர் தேர்வு செய்யப்பட்டதையும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கு நாடான சிரியாவில் பதுங்கியிருந்த, ஐ.எஸ்., பயங்கரவாத அமைப்பின் தலைவர் அல் பாக்தாதியை, சமீபத்தில் அமெரிக்க ராணுவம் சுற்றி வளைத்தது. தப்பிக்க முடியாததால், தன் உடலில் கட்டியிருந்த குண்டுகளை வெடிக்கச் செய்து, அல் பாக்தாதி, தற்கொலை செய்தார். இதன் பின், பாக்தாதி உடலை, அமெரிக்க ராணுவம், கடலில் தூக்கி வீசி அடக்கம் செய்தது.

இந்நிலையில், ஐ.எஸ்., பயங்கரவாத அமைப்பின் தலைவர் அல் பாக்தாதி கொல்லப்பட்டதை அந்த அமைப்பு உறுதி செய்துள்ளது. மேலும் அபூஹசன் அல் முஹாஜிர் கொல்லப்பட்டதையும் உறுதி செய்துள்ளது. பயங்கரவாத அமைப்பின் புதிய தலைவராக அபூ இப்ராஹிம் அல் ஹஷிமி அல் குரேஷி என்பவர் நியமிக்கப்பட்டுள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.


**பெயர் மாற்றம்**

AKASH KUMAR, பிறந்த தேதி: 8.11.2003, எண்.110, மதனந்தபுரம் மெயின் ரோடு, மதனந்தபுரம், போரூர், சென்னை–600 116, வசிக்கும் எனது மகன் இனி **AKASH VALARMATHI,** என்று அழைக்கப்படுகிறார்.

**M.Valarmathi**, தாய்

**பெயர் மாற்றம்**

Madhumathi Bommuraj Santhini, தந்தை பெயர்: Bommuraj, பிறந்த தேதி: 11.02.1998, எண்.590/605, F 14, Agastya Apartment, டி.எச்.ரோடு, தண்டையார்பேட்டை, சென்னை–600 081, வசிக்கும் நான் இனி

**aban அபான் ஆப்ஷோர் லிமிடெட்**

பதிவு அலுவலகம்: "ஜன்பிரியா கிரஸ்ட்" 113, பாந்தியன் ரோடு, எழும்பூர், சென்னை–600 008.
CIN: L01119TN1986PLC013473
Ph: (91) (44) 49060606
இமெயில்: abanoffshore@aban.com
வெப்சைட்: www.aban.com

**அறிவிப்பு**

செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 29 மற்றும் 47ன்படி, இதர அலுவல்களுக்கு இடையே 30 செப்டம்பர், 2019ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத தனியான மற்றும் ஒருங்கிணைந்த முடிவுகளை பரிசீலித்து பதிவு செய்ய கம்பெனி இயக்குனர்கள் குழு கூட்டம் திங்கட்கிழமை, 11 நவம்பர் 2019 அன்று கம்பெனியின் பதிவு அலுவலகத்தில் நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
இந்த அறிவிப்பு கம்பெனியின் இணைய தளம் (www.abanoffshore.com) மற்றும் பிஎஸ்இ லிமிடெட் (www.bseindia.com) மற்றும் தி நேஷனல் ஸ்டாக் எக்சேஞ் ஆப் இந்தியா லிமிடெட் (www.nseindia.com)ல் உள்ளது.

குழுவின் ஆணைப்படி
S.N. பாலாஜி
உதவி பொது மேலாளர் (சட்டம்)
மற்றும் செயலாளர்
இடம்: சென்னை
தேதி: அக்டோபர் 31, 2019

**ESSAR**

**எஸ்ஸார் செக்யூரிடீஸ் லிமிடெட்**

பதிவு அலுவலகம்: 56, புதிய எண். 77, C.P. ராமசாமி ரோடு, அபிராமபுரம், சென்னை–600 018, தமிழ்நாடு, இந்தியா.
Tel.: +91 44 2499 5340 Fax: 91 44 2535 1272
CIN: L65990TN2005PLC071791
Email id: eslinvestors@essar.com • Website: www.essar.com

**அறிவிப்பு**

செக்யூரிடீஸ் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) கட்டுப்பாடுகள் 2015ன் கட்டுப்பாடு 29 மற்றும் கட்டுப்பாடு 47ன்படி, நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள இதர அலுவல்களுக்கு இடையே, 30 செப்டம்பர், 2019ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து ஒப்புதல் அளிக்க கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் செவ்வாய்க்கிழமை, நவம்பர் 12, 2019 அன்று எஸ்ஸார் ஹவுஸ், 11, கே.கே. மார்க், மகாலட்சுமி, மும்பை–400 034, மகாராஷ்டிராவில் நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேற்சொன்ன அறிவிப்பு கம்பெனியின் இணையதளம் www.essar.com மற்றும் ஸ்டாக் எக்சேஞ்சின் இணையதளம் www.bseindia.comல் உள்ளது.

எஸ்ஸார் செக்யூரிடீஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/– லட்சுமி ஜோஷி
கம்பெனி செயலாளர்
தேதி: அக்டோபர் 31, 2019
இடம்: மும்பை

**தூத்துக்குடி அல்கலி கெமிக்கல்ஸ் அண்டு பெர்டிலைசர்ஸ் லிமிடெட்**

பதிவு அலுவலகம்: ஸ்பிக் ஹவுஸ், 88, மவுண்ட் ரோடு, கிண்டி, சென்னை–600 032.
CIN L24119TN1971PLC006083
E.Mail ID info@tacfert.com ; Web Site www.tacfert.in Ph: 044 - 22352513

**அறிவிப்பு**

செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 29 மற்றும் 47ன்படி, இதர அலுவல்களுக்கு இடையே 30 செப்டம்பர், 2019ல் முடிந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கையாகாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து ஒப்புதல் அளிக்க கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் திங்கட்கிழமை, 11 நவம்பர், 2019 அன்று நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேலும், உள்வர்த்தக வர்த்தகம் தடுப்பு நடத்தை குறியீட்டின்படி, 11 நவம்பர் 2019 அன்று பொதுமக்களுக்கு முடிவுகள் அளித்த பின்னர் 48 மணி நேரம் வரை கம்பெனியின் பத்திர வர்த்தக சாளரம் மூடப்பட்டிருக்கும் என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

தூத்துக்குடி அல்கலி கெமிக்கல்ஸ் அண்டு பெர்டிலைசர்ஸ் லிமிடெட்டிற்காக
G. ராமச்சந்திரன்
நிர்வாக இயக்குனர்
இடம்: சென்னை
தேதி: 31.10.2019

**தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம், சென்னை பெஞ்ச்**

நிறுவனத்தின் விண்ணப்ப எண் : CA's/1018 TO 1022/CAA/2019

**ஹரிதா லிமிடெட் (ட்ரான்ஸ்ஃபெரார் கம்பெனி 1) மற்றும் ஹரிதா வேணு பிரைவேட் லிமிடெட் (ட்ரான்ஸ்ஃபெரார் கம்பெனி 2) மற்றும் ஹரிதா சீமா பிரைவேட் லிமிடெட் (ட்ரான்ஸ்ஃபெரார் கம்பெனி 3) மற்றும் ஹரிதா பைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் (ட்ரான்ஸ்ஃபெரார் கம்பெனி 4) மற்றும் ஹரிதா சீட்டிங் சிஸ்டம்ஸ் லிமிடெட் (ட்ரான்ஸ்ஃபெரார் கம்பெனி 5) மற்றும் மிண்டா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் (டிரான்ஸ்ஃபெரி கம்பெனி) மற்றும் இவற்றின் பங்குதாரர்கள், சம்மந்தப்பட்ட கூட்டு ஒருங்கிணைப்பு திட்டம் குறித்தானது.**

**ஹரிதா பைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்,**
1956 ஆம் வருடத்திய கம்பெனிகள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது.
பதிவு அலுவலகம்: "ஜெயலட்சுமி எஸ்டேட்ஸ்", எண். 29, ஹாடோஸ் சாலை,
சென்னை 600 006, தமிழ்நாடு.
CIN: U67190TN1996PLC035318 ...விண்ணப்பதாரர் நிறுவனம் / ட்ரான்ஸ்ஃபெரார் கம்பெனி 4 / நிறுவனம்

**அறிவிப்பு**

கம்பெனிகள் சட்டம் 2013, 230 முதல் 232 வரையிலான பிரிவுகளின் கீழ் முன்மொழியப்பட்ட ஹரிதா லிமிடெட் (ட்ரான்ஸ்ஃபெரார் கம்பெனி 1) மற்றும் ஹரிதா வேணு பிரைவேட் லிமிடெட் (ட்ரான்ஸ்ஃபெரார் கம்பெனி 2) மற்றும் ஹரிதா சீமா பிரைவேட் லிமிடெட் (ட்ரான்ஸ்ஃபெரார் கம்பெனி 3) மற்றும் ஹரிதா பைனான்சியல்

**MPS எம்பிஎஸ் லிமிடெட்**

பதிவு அலுவலகம்: 4வது தளம், R.R. டவர்ஸ் IV, சூப்பர் ஏ, திரு.வி.க இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை–600 032
CIN: L22122TN1970PLC005795
Tel: +91 44 49162222, Fax: +91 44 49162225, Email: investors@mpslimited.com, Website: www.mpslimited.com

30 செப்டம்பர் 2019ல் முடிந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான ஒருங்கிணைந்த தணிக்கையாகாத நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்

ரூ. லட்சத்தில், ஒரு சம பங்கு விவரம் நீங்கலாக

| விவரங்கள் | முடிந்த காலாண்டு | கடந்தாண்டில் முடிந்த இதே காலாண்டு | இன்றைய தேதி வரையிலான முடிந்த ஆறு மாத கணக்குகள் |
|---|---|---|---|
| | 30 செப்டம்பர் 2019 | 30 செப்டம்பர் 2018 | 30 செப்டம்பர் 2019 |